(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 73.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2025 ஆகஸ்ட் 06, புதன்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன,** சபாநாயகர்

**கௌரவ (டாக்டர்) ரிஸ்வி சாலி**, பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ (திருமதி) ஹேமாலி வீரசேகர**, குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ கலாநிதி ஹரினி அமரசூரிய,** பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்

**கௌரவ (பேராசிரியர்) ஏ.எச்.எம்.எச். அபயரத்ன,** பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ (பேராசிரியர்) கிரிஷாந்த அபேசேன,** விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சர்

**கௌரவ அனுர கருணாதிலக்க,** நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர்

**கௌரவ சுனில் குமார கமகே,** இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்

**கௌரவ ராமலிங்கம் சந்திரசேகர்,** கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர்

**கௌரவ குமார ஜயகொடி,** வலுசக்தி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) நலிந்த ஜயதிஸ்ஸ,** சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ (கலாநிதி) அனில் ஜயந்த,** தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி ஹர்ஷன நானாயக்கார,** நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) தம்மிக பட்டபெந்தி,** சுற்றாடல் அமைச்சர்

**கௌரவ (திருமதி) சரோஜா சாவித்திரி போல்ராஜ்,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ பிமல் ரத்நாயக்க,** போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ ஆனந்த விஜேபால,** பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கே.வி. சமந்த வித்யாரத்ன,** பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்

**கௌரவ வசந்த சமரசிங்க,** வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) ஹினிதும சுனில் செனெவி,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,** கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ விஜித ஹேரத்,** வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர்

**கௌரவ சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ சதுரங்க அபேசிங்ஹ,** கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ நாமல் கருணாரத்ன,** கமத்தொழில் மற்றும் கால்நடை வளங்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ ஜனித ருவன் கொடித்துவக்கு,** துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சர்

**கௌரவ ரத்ன கமகே,** கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ எரங்க குணசேகர,** இளைஞர் விவகாரங்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) பிரசன்ன குணசேன,** போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர்

**கௌரவ எண்டன் ஜயகொடி,** சுற்றாடல் பிரதி அமைச்சர்

**கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ,** தொழில் பிரதி அமைச்சர்

**கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) அருண ஜயசேகர,** பாதுகாப்பு பிரதி அமைச்சர்

**கௌரவ கமகெதர திசாநாயக்க,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ வசந்த பியதிஸ்ஸ,** கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை பிரதி அமைச்சர்

**கௌரவ சுந்தரலிங்கம் பிரதீப்,** பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர்

**கௌரவ முனீர் முலாபர்,** தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சர்

**கௌரவ (பேராசிரியர்) ருவன் ரணசிங்க,** சுற்றுலா பிரதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) சுசில் ரணசிங்ஹ,** காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ஹங்சக விஜேமுணி,** சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக பிரதி அமைச்சர்

**கௌரவ எரங்க வீரரத்ன,** டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர்

**கௌரவ உபாலி சமரசிங்ஹ,** கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ ரீ. பீ. சரத்,** வீடமைப்பு பிரதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) நாமல் சுதர்சன,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ பி. ருவன் செனரத்,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி பிரதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) மதுர செனெவிரத்ன,** கல்வி, உயர் கல்வி பிரதி அமைச்சர்

**கௌரவ அருண் ஹேமச்சந்திரா,** வெளிநாட்டலுவல்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர்

**கௌரவ நலின் ஹேவகே,** தொழிற் கல்வி பிரதி அமைச்சர்

---

**கௌரவ ரொஷான் அக்மீமன**

**கௌரவ அஜித் அகலகட**

**கௌரவ அமிர்தநாதன் அடைக்கலநாதன்**

**கௌரவ அபூபக்கர் ஆதம்பாவா**

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ ரோஹித அபேகுணவர்தன**

**கௌரவ (பேராசிரியர்) எல்.எம். அபேவிக்ரம**

**கௌரவ (டாக்டர்) நிஹால் அபேசிங்ஹ**

**கௌரவ (டாக்டர்) இராமநாதன் அர்ச்சுனா**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ எம்.கே. எம். அஸ்லம்**

**கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி**

**கௌரவ மஞ்ஜுள சுரவீர ஆரச்சி**

**கௌரவ (கலாநிதி) (செல்வி) கௌஷல்யா ஆரியரத்ன**

**கௌரவ பீ. ஆரியவங்ஷ**

**கௌரவ (டாக்டர்) நஜீத் இந்திக்க**

**கௌரவ கே.இளங்குமரன்**

**கௌரவ அர்கம் இல்யாஸ்**

**கௌரவ எம்.எஸ். உதுமாலெப்பை**

**கௌரவ (திருமதி) ஒஷானி உமங்கா**

**கௌரவ கயந்த கருணாதிலக்க**

**கௌரவ ரவி கருணாநாயக்க**

**கௌரவ (செல்வி) கிருஷ்ணன் கலைச்செல்வி**

**கௌரவ சனாதிபதி சட்டத்தரணி எம். நிசாம் காரியப்பர்**

**கௌரவ உபுல் கித்சிறி**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே**

**கௌரவ கதிரவேலு சண்முகம் குகதாசன்**

**கௌரவ வசந்த புஷ்ப குமார**

**கௌரவ சமிந்த லலித் குமார**

**கௌரவ சட்டத்தரணி சரத் குமார**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி நிலந்தி கொட்டஹச்சி**

**கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன்**

**கௌரவ (திருமதி) எம்.ஏ.சீ.எஸ். சத்துரி கங்கானி**

**கௌரவ மனோ கணேசன்**

கௌரவ லசித் பாஷண கமகே

கௌரவ திலங்க யூ. கமகே

கௌரவ அஜந்த கம்மெத்தெகே

கௌரவ சதுர கலப்பத்தி

கௌரவ நிஹால் கலப்பத்தி

கௌரவ அஜித் கிஹான்

கௌரவ (டாக்டர்) ஜகத் குணவர்தன

கௌரவ (திருமதி) சமன்மலீ குணசிங்ஹ

கௌரவ அசோக குணசேன

கௌரவ டி.வீ. சானக

கௌரவ கயான் ஜனக

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ திலித் ஜயவீர

கௌரவ நிசாந்த ஜயவீர

கௌரவ (திருமதி) சட்டத்தரணி துஷாரி ஜயசிங்ஹ

கௌரவ ரீ.கே. ஜயசுந்தர

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர

கௌரவ மயில்வாகனம் ஜெகதீஸ்வரன்

கௌரவ எம். ஏ. எம். தாஹிர்

கௌரவ (டாக்டர்) செல்லத்தம்பி திலகநாதன்

கௌரவ (திருமதி) சட்டத்தரணி அனுஸ்கா திலகரத்ன

கௌரவ சந்தன தென்னகோன்

கௌரவ சாமர சம்பத் தசநாயக

கௌரவ சுகத் வசந்த த சில்வா

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ தனுர திசாநாயக

கௌரவ தர்மப்பிரிய திசாநாயக்க

கௌரவ சுஜீவ திசாநாயக்க

கௌரவ சட்டத்தரணி சுசந்த தொடாவத்த

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ சுசந்த குமார நவரத்ன

கௌரவ (பேராசிரியர்) சேன நாணாயக்கார

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ நந்தன பத்மகுமார

கௌரவ அருண பனாகொட

கௌரவ நிமல் பலிஹேன

கௌரவ நிஷாந்த பெரேரா

கௌரவ அஜித் பி. பெரேரா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம்

கௌரவ சட்டத்தரணி சித்ரால் பெர்னாந்து

கௌரவ ஸ்டெபனி பிரனாந்து

கௌரவ கந்தசாமி பிரபு

கௌரவ அமில பிரசாத்

கௌரவ லால் பிரேமநாத்

கௌரவ நந்த பண்டார

கௌரவ பத்மசிரி பண்டார

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ ரவீந்திர பண்டார

கௌரவ றிஸாட் பதியுதீன்

கௌரவ சுதத் பலகல்ல

கௌரவ (டாக்டர்) எஸ். ஸ்ரீ பவானந்தராஜா

கௌரவ ஈ.எம். பஸ்நாயக

கௌரவ விஜேசிரி பஸ்நாயக்க

கௌரவ சுனில் பியன்வில

கௌரவ (டாக்டர்) சந்தருவன் மதரசிங்ஹ

கௌரவ லெப்டினன் கமாண்டர் (ஓய்வுபெற்ற) பிரகீத் மதுரங்க

கௌரவ ஜகத் மனுவர்ண

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ கே.காதர் மஸ்தான்

கௌரவ இம்ரான் மகரூப்

கௌரவ சானக மாதுகொட

கௌரவ ருவன் மாபலகம

கௌரவ (கலாநிதி) நந்தன மில்லகல

கௌரவ இஸ்மாயில் முத்து மொஹம்மட்

கௌரவ தனுஷ்க ரங்கனாத்

கௌரவ சஞ்ஜீவ ரணசிங்ஹ

கௌரவ ஆர்.எம். சமந்த ரனசிங்ஹ

கௌரவ சுனில் ரத்னசிரி

கௌரவ ஆர்.எம். காமிணி ரத்நாயக்க

கௌரவ மஞ்சுல சுகத் ரத்னாயக

கௌரவ (திருமதி) ஏ.எம்.எம்.எம். ரத்வத்தே

கௌரவ அசோக சபுமல் ரன்வல

கௌரவ துரைராசா ரவிகரன்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ ஹர்ஷன ராஜகருணா

கௌரவ சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷ

கௌரவ மனோஜ் ராஜபக்ஷ்

கௌரவ சுனில் றாஜபக்ஷ

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்

கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹசாரா லியனகே

கௌரவ (திருமதி) தீப்தி வாசலகே

கௌரவ எம்.எஸ் அப்துல் வாசித்

கௌரவ கஞ்சன வெலிப்பிட்டிய

கௌரவ ஆர்.ஜீ. விஜேரத்ன

கௌரவ சட்டத்தரணி பிரியந்த விஜேரத்ன

கௌரவ ருவன் விஜேவீர

கௌரவ தர்மப்ரிய விஜேசிங்ஹ

கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹிருனி விஜேசிங்ஹ

கௌரவ சமிந்த விஜேசிறி

கௌரவ அசித நிரோஷண எகொட வித்தான

கௌரவ ஜகத் விதான

கௌரவ திலிப் வெதஆரச்சி

கௌரவ அதுல வெலதகொட

கௌரவ சிவஞானம் சிறீதரன்

கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்

கௌரவ பஸ்மின் சரீப்

கௌரவ (டாக்டர்) பத்மநாதன் சத்தியலிங்கம்

கௌரவ திலிண சமரகோன்

கௌரவ (டாக்டர்) நிஷாந்த சமரவீர

கௌரவ (டாக்டர்) இளையதம்பி சிறிநாத்

கௌரவ ஷாந்த பத்ம குமார சுபசிங்ஹ

கௌரவ தேவானந்த சுரவீர

கௌரவ சந்தன சூரியஆரச்சி

கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) ஜீ.டி.சூரியபண்டார

கௌரவ அரவிந்த செனரத்

**கௌரவ கிட்ணன் செல்வராஜ்**

**கௌரவ சட்டத்தரணி அர்ஜுன சுஜீவ சேனசிங்ஹ**

**கௌரவ (டாக்டர்) ஜனக சேனாரத்ன**

**கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்**

**கௌரவ கபீர் ஹஷீம்**

**கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்**

**கௌரவ சந்திம ஹெட்டிஆரச்சி**

**கௌரவ சம்பிக ஹெட்டிஆரச்சி**

**கௌரவ தினிந்து சமன் ஹென்னாயக்க**

**கௌரவ (செல்வி) சட்டத்தரணி லக்மாலி ஹேமசந்திர**

**கௌரவ தினேஷ் ஹேமந்த**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி கீதா ஹேரத்**

**கௌரவ சட்டத்தரணி பாக்ய ஸ்ரீ ஹேரத்**

**கௌரவ முஹம்மட் பைசல்**

**கௌரவ ரியாஸ் பாருக்**

திருமதி குஷானி ரோஹனதீர, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. சமிந்த குலரத்ன, பதவியணிப் பிரதானி மற்றும் பாராளுமன்றப் பிரதிச் செயலாளர் நாயகம்

திரு. ஹன்ஸ அபேரத்ன, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

1. ***சபாநாயகரின் அறிவித்தல்கள்:*** சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார்:—

**I**

"அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம், உயர் நீதிமன்றத்திற்கு சவாலுக்குட்படுத்தப்பட்ட 'தேசிய கணக்காய்வு(திருத்தம்)' எனும் சட்டமூலம் தொடர்பாக உயர்நீதிமன்றத்தின் தீர்மானமானது எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ளது என்பதினை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகின்றேன்.

S.C.(SD)21/2025 மனுதாரர்கள் குழுநிலை திருத்தங்களில் முன்மொழியப்பட்ட திருத்தங்களில் திருப்தி அடைந்ததால், மனுவினை மீளப்பெற்றதாக உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தை இன்றைய கூட்ட நடவடிக்கைகள் பற்றிய அதிகார அறிக்கையில் பதிப்பிட வேண்டுமென நான் கட்டளையிடுகின்றேன்."

2. **பத்திரங்கள் சமர்ப்பித்தல்:** (1)சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் 2024 ஆம் நிதியாண்டுக்கான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கையின் மூன்றாவது தொகுதியின் I ஆம் பகுதியைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(2) கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் 2023 ஆம் ஆண்டுக்கான கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை பொருளாதார அபிவிருத்தி மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர், அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை பற்றிய விடயம் தொடர்பில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 120(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர், 2024 ஆம் ஆண்டுக்கான உணவு ஆணையாளர் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை சுற்றாடல், கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர், 2023 ஆம் ஆண்டுக்கான தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை கல்வி, ஊழியப் படை மற்றும் மனித மூலதனம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் புத்தசாசனம், சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு பற்றிய விடயம் தொடர்பில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை ஆகியவற்றைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்:** (1) சுற்றாடல், கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ ஹெக்டர் அப்புஹாமி அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட –

(i) தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் 2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை; மற்றும்

(ii) 2020, 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் செயலாற்றுகை அறிக்கைகள்

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(2) பொருளாதார அபிவிருத்தி மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ சட்டத்தரணி (செல்வி) லக்மாலி ஹேமச்சந்திர சார்பாக அக்குழுவின் உறுப்பினர் கௌரவ விஜேசிரி பஸ்நாயக்க அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட–

(i) 2023 ஆம் ஆண்டிற்கான நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாற்றுகை அறிக்கை;

(ii) 2023 ஆம் ஆண்டிற்கான வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாற்றுகை அறிக்கை; மற்றும்

(iii) 2022 ஆம் ஆண்டிற்கான இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் வருடாந்த அறிக்கை

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**4. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) (i) கொழும்பு 05, கெப்பெட்டிபொல மாவத்தை, சமுலு நிவாச, இல. 12/சீ யில் வதியும் திரு. டி.எம்.ஆர்.டி.எஸ். ராஜகருணா மற்றும் மேலும் ஒன்பது பேரினது 2025.05.07 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(ii) தெஹிவளை, ஸ்ரீ சரணங்கர வீதி, சரணங்கர டெரஸ், இல. 04 இல் வதியும் திரு. கே. காமினி புன்னியசிரி பிரனாந்துவினது 2025.04.20 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா சமர்ப்பித்தார்.

(2) தும்மோதர, லபுகம, தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை எனும் முகவரியில் பணிபுரியும் திரு. ஐ.டி.டி.எல். சமரநாயக்கவினது 2025.03.26 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ அர்கம் இல்யாஸ் சமர்ப்பித்தார்.

(3) மாத்தறை, வெவஹமன்தூவ, இல. 18 இல் வதியும் திரு. ரீ. சுரவீரவினது 2025.05.05 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ அஜந்த கம்மெத்தகே சமர்ப்பித்தார்.

(4) பிட்டிகல, கால்லெ கெதர வத்த, பொரலுஹேன பன்சல வீதி எனும் முகவரியில் வதியும் திரு. எம். விமலசேனவினது 2025.05.02 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ ரீ.கே. ஜயசுந்தர சமர்ப்பித்தார்.

(5) (i) களுத்துறை தெற்கு, மஹா ஹீனடியங்கல, கந்தெவத்த, சுவசேவா மாவத்தை, இல. 153/4 இல் வதியும் திரு. பீ.எச்.டி.எச். திலகரத்னவினது 2025.01.27 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) களுத்துறை, நாகொட, போதியவத்த, இல. 62/19 பீ, 4 ஆம் ஒழுங்கை எனும் முகவரியில் வதியும் திரு. ஆர்.எஸ். விமலசிரி த சில்வாவினது 2024.11.25 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(iii) ஹொரனை, முனகம, தக்ஷிலா உயன, இல. 156 இல் வதியும் திரு. ஆர்.எச்.எம். ரணசிங்கவினது 2025.02.20 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

கௌரவ நந்தன பத்மகுமார சமர்ப்பித்தார்.

(6) கேகாலை, நில்வக்க, 'இந்திரஜித்', இல. ஈ 7 இல் வதியும் திரு. பீ.ஏ. கருணாதிலகவினது 2025.05.19 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ ஸ்டெபனி பிரனாந்து சமர்ப்பித்தார்.

(7) நாரம்மல, பெம்முல்லெகெதர, மீவெவ, போமலு வத்த எனும் முகவரியில் வதியும் திருமதி டி.பீ. மானெல் சோமரத்னவினது 2025.03.10 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ விஜேசிரி பஸ்நாயக்க சமர்ப்பித்தார்.

(8) கேகாலை, பெரிய வைத்தியசாலை, வைத்திய ஆவண உதவியாளர் எனும் முகவரியில் பணிபுரியும், திரு. கே.எம்.யூ.எஸ். ஜாலிய பண்டாரவினது மற்றும் மேலும் இருவரினதும் 2025.03.07 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ (கலாநிதி) நந்தன மில்லகல சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**5. சட்டமூலம் கொண்டுவர அனுமதி:** “இலங்கை வசதிகள் முகாமைத்துவ நிறுவகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்” எனும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக என கௌரவ கே. காதர் மஸ்தான் பிரேரித்தார். கௌரவ அமிர்தநாதன் அடைக்கலநாதன் அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் முதலாவது முறையாக மதிப்பிடப்பெற்று அச்சிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

52 (6) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய அறிக்கையிடுவதற்காக சட்டமூலம் நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சரின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**6. இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டமூலம்:** இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

“சட்டமூலம் இப்பொழுது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக”என வலுசக்தி அமைச்சர் சார்பாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிரேரித்தார்.

(மு.ப. 11.47 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

(பி.ப. 1.00 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

“கௌரவ அரவிந்த செனரத் தலைமை தாங்குவாராக” என தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 1.36 மணிக்கு கௌரவ அரவிந்த செனரத் தலைமை தாங்கினார்.)

“கௌரவ சானக மாதுகொட தலைமை தாங்குவாராக” என வலுசக்தி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 2.45 மணிக்கு கௌரவ சானக மாதுகொட தலைமை தாங்கினார்.)

“கௌரவ (பேராசிரியர்) சேன நாணாயக்கார தலைமை தாங்குவாராக” என நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 3.51 மணிக்கு கௌரவ (பேராசிரியர்) சேன நாணாயக்கார தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு சார்பாக 121; எதிராக 25; பேரும் வாக்களித்து ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 47(2) (ஆ) இன் பிரகாரம் இலத்திரனியல் வாக்கெடுப்பு முறையினைப் பயன்படுத்தி நூற்றி நாற்பத்தாறு (146) கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் பின்வருமாறு வாக்களிப்பினை மேற்கொண்டுள்ளனர்:-

| | |
|---|---|
| G 001. K.V. Samantha Viddyarathna | Yes |
| G 002. Sunil Handunnetti | Yes |
| G 004. Vijitha Herath | Yes |
| G 005. Nalinda Jayathissa | Yes |
| G 006. Bimal Rathnayake | Yes |
| G 007. Harini Amarasuriya | Yes |
| G 009. Ramalingam Chandrasekar | Yes |
| G 010. Wasantha Samarasinghe | Yes |
| G 017. Ananda Wijepala | Yes |
| G 018. Hiniduma Sunil Senevi | Yes |
| G 019. Sunil Kumara Gamage | Yes |
| G 020. Kumara Jayakody | Yes |
| G 022. Anura Karunathilaka | Yes |
| G 025. Nihal Abeysinghe | Yes |
| G 027. Wasantha Piyathissa | Yes |
| G 028. Gamagedara Dissanayake | Yes |
| G 031. Rathna Gamage | Yes |
| G 032. Mahinda Jayasinghe | Yes |
| G 033. Chathuranga Abeysinghe | Yes |
| G 034. Eranga Gunasekara | Yes |
| G 038. Prasanna Gunasena | Yes |
| G 039. Anton Jayakody | Yes |
| G 044. Susil Ranasinghe | Yes |
| G 045. Hansaka Wijemuni | Yes |
| G 046. Eranga Weeraratne | Yes |
| G 047. Namal Sudarshana | Yes |
| G 048. P. Ruwan Senarath | Yes |
| G 049. Madhura Senevirathna | Yes |
| G 050. Arun Hemachandra | Yes |
| G 051. Janitha Ruwan Kodithuwakku | Yes |
| G 052. Aruna Jayasekera | Yes |
| G 057. Manjula Suraweera Arachchi | Yes |
| G 058. K. Ilankumaran | Yes |
| G 059. Shantha Pathma Kumara Subasingha | Yes |
| G 060. Samanmali Gunasingha | Yes |
| G 061. Gayan Janaka | Yes |
| G 062. Ajith Agalakada | Yes |
| G 064. Roshan Akmeemana | Yes |
| G 066. L.M. Abeywickrama | Yes |
| G 067. M.K.M. Aslam | Yes |
| G 068. Kaushalya Ariyarathne | Yes |
| G 069. Asitha Niroshana Egoda Vithana | Yes |
| G 070. Arkam Ilyas | Yes |
| G 071. Oshani Umanga | Yes |

| | |
|---|---|
| G 072. Krishnan Kalaichelvi | Yes |
| G 073. Upul Kithsiri | Yes |
| G 074. Wasantha Pushpa Kumara | Yes |
| G 075. Chaminda Lalith Kumara | Yes |
| G 076. Sarath Kumara | Yes |
| G 077. Nilanthi Kottahachchi | Yes |
| G 078. M.A.C.S. Chathuri Gangani | Yes |
| G 079. Lasith Bhashana Gamage | Yes |
| G 082. Ajantha Gammeddage | Yes |
| G 083. Ajith Gihan | Yes |
| G 084. Jagath Gunawardana | Yes |
| G 085. Aboobucker Athambawa | Yes |
| G 086. Ruwanthilaka Jayakody | Yes |
| G 087. Thushari Jayasingha | Yes |
| G 088. T.K. Jayasundara | Yes |
| G 089. Mayilvaganam Jegatheeswaran | Yes |
| G 091. Sellaththamby Thilaganathan | Yes |
| G 092. Anushka Thilakarathne | Yes |
| G 093. Chandana Thennakoon | Yes |
| G 094. Thanura Dissanayake | Yes |
| G 095. Dharmapriya Dissanayake | Yes |
| G 096. Sujeewa Dissanayake | Yes |
| G 097. Sugath Wasantha de Silva | Yes |
| G 098. Susantha Dodawatta | Yes |
| G 099. Susantha Kumara Nawarathna | Yes |
| G 101. Najith Indika | Yes |
| G 102. Aruna Panagoda | Yes |
| G 103. Nimal Palihena | Yes |
| G 104. Nishantha Perera | Yes |
| G 105. Stepni Fernando | Yes |
| G 106. Kanthasamy Prabu | Yes |
| G 107. Lal Premanath | Yes |
| G 108. Nanda Bandara | Yes |
| G 109. Padmasiri Bandara | Yes |
| G 110. Ravindra Bandara | Yes |
| G 111. Sudath Balagalla | Yes |
| G 112. Sri Bavanandarajah | Yes |
| G 113. E. M. Basnayaka | Yes |
| G 114. Wijesiri Basnayake | Yes |
| G 115. Lakmali Hemachandra | Yes |
| G 116. S. Sandaruwan Madarasinghe | Yes |
| O 001. Mano Ganeshan | No |
| O 002. Kabir Hashim | No |
| O 006. R.M.Ranjith Madduma Bandara | No |

| | |
|---|---|
| O 007. Gayantha Karunathilleka | No |
| O 008. Sajith Premadasa | No |
| O 017. M.A.M. Thahir | No |
| O 021. Dayasiri Jayasekara | No |
| O 022. Harsha de Silva | No |
| O 023. Ajith P. Perera | No |
| O 024. Sujeewa Senasinghe | No |
| O 027. J. C. Alawathuwala | No |
| O 029. Hector Appuhamy | No |
| O 030. Hesha Withanage | No |
| O 031. Kavinda Heshan Jayawardhana | No |
| O 034. Imran Maharoof | No |
| O 041. Chaminda Wijesiri | No |
| O 042. Mujibur Rahman | No |
| O 046. W.H.M. Dharmasena | No |
| O 049. Chamindranee Kiriella | No |
| O 050. Chathura Galappaththi | No |
| O 051. Chithral Fernando | No |
| O 052. Amila Prasad | No |
| O 058. Abthul Wazeeth | No |
| O 062. Jagath Vithana | No |
| O 064. Nissam Kariyappar | No |
| O 065. Prageeth Madhuranga | Yes |
| O 066. Jagath Manuwarna | Yes |
| O 067. Ruwan Mapalagama | Yes |
| O 068. Nandana Millagala | Yes |
| O 069. Riyas Farook | Yes |
| O 070. Danushka Ranganath | Yes |
| O 071. Sanjeewa Ranasingha | Yes |
| O 072. Sunil Rathnasiri | Yes |
| O 082. A.M.M.M. Rathwaththe | Yes |
| O 083. Manoj Rajapaksha | Yes |
| O 084. Sunil Rajapaksha | Yes |
| O 085. Hasara Liyanage | Yes |
| O 086. Deepthi Wasalage | Yes |
| O 087. Kanchana Welipitiya | Yes |
| O 088. R. G. Wijerathna | Yes |
| O 089. Nishantha Samaraweera | Yes |
| O 091. Ruwan Wijeweera | Yes |
| O 092. Darmapriya Wijesinghe | Yes |
| O 093. Hiruni Wijesinghe | Yes |
| O 094. Athula Welandagoda | Yes |
| O 096. Dinindu Saman | Yes |
| O 097. Thilina Samarakoon | Yes |

| | |
|---|---|
| O 100. Chandana Sooriyaarachchi | Yes |
| O 101. G.D. Sooriyabandara | Yes |
| O 102. Aravinda Senarath | Yes |
| O 103. Kitnan Selvaraj | Yes |
| O 104. Janaka Senarathna | Yes |
| O 105.Chandima Hettiaratchi | Yes |
| O 106. Champika Hettiarachchi | Yes |
| O 107. Dinesh Hemantha | Yes |
| O 108. Geetha Herath | Yes |
| O 111. Ashoka Gunasena | Yes |
| O 112. Nandana Pathmakumara | Yes |
| O 113. Sunil Biyanwila | Yes |
| O 114. Samantha Ranasingha | Yes |
| O 115. Nishantha Jayaweera | Yes |

அதன் பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெற்றது.

“சட்டமூலம் முழுப்பாராளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக” என வலுசக்தி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுவில்)

தலைமைதாங்கும் உறுப்பினர் தலைமை தாங்கினார்.

1 முதல் 3 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

4 ஆம் வாசகம்

3 ஆம் பக்கத்தில் 12 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு வலுசக்தி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“நீண்டகால மின்கடத்துகை அபிவிருத்தித் திட்டமும்”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

5 ஆம் வாசகம்

4 ஆம் பக்கத்தில் 31 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு வலுசக்தி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“சொற்களுக்குப் பதிலாக,தொகுதியற்றனவாக்கப்பட்ட மின்சாரத் துறை”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

6 மற்றும் 7 ஆம் வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

8 ஆம் வாசகம்

9 ஆம் பக்கத்தில் 2 ஆம் மற்றும் 3 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு வலுசக்தி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"உறுப்பினரை மேலுமொரு மூன்றாண்டு பதவிக்காலத்துக்கு மீள நியமிக்கலாம்.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

9 ஆம் பக்கத்தில் 3 ஆம் வரியை உடனடுத்து பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு வலுசக்தி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"(2உ) அமைச்சரினால் நியமிக்கப்பட்ட குழு 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டம் மற்றும் அச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கருத்தெல்லையினுள் அதற்கிணங்கப் பொருளமைத்துக்கொள்ளப்பட வேண்டிய அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.";";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

9 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

10 ஆம் வாசகம்

11 ஆம் பக்கத்தில் 4 ஆம் வரியை உடனடுத்து பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு வலுசக்தி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் (அ) என்னும் பந்தியில் "இலங்கையின்" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "தொடர்ச்சியானதும் நம்பகமானதுமான மின்வழங்கலை உறுதிப்படுத்தி, இலங்கையின்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; ";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

11 ஆம் வாசகம்

14 ஆம் பக்கத்தில் 3 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு வலுசக்தி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"பட்டவாறாக போட்டியுள்ள துணைச் சேவை சந்தையானது";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

12 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

13 ஆம் வாசகம்

14 ஆம் பக்கத்தில் 36 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு வலுசக்தி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"(உ), (ஊ), (எ), (ஏ), (i) மற்றும் (ஏ)(ii) என்பவற்றில்";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

15 ஆம் பக்கத்தில் 29 முதல் 31 வரையான (இரண்டுமுட்பட) வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு வலுசக்தி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"திறைசேரிச் செயலாளருக்கு, அட்டவணை I றின் விடயங்கள் (அ), (உ), (ஊ), (எ) மற்றும் (ஏ)(ii) என்பவற்றிலும் நீரியல் மின்சக்திப் பிறப்பாக்கம் தொடர்பில் அட்டவைண I றின் விடயம் (ஐ)(i) இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள கம்பெனி என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்ட ";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

15 ஆம் பக்கத்தில் 39 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு வலுசக்தி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"வேண்டும். அத்துடன்";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

16 ஆம் பக்கத்தில் 1 முதல் 11 வரையான (இரண்டுமுட்பட) வரிகளை நீக்கிவிடுமாறு வலுசக்தி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

19 ஆம் பக்கத்தில் 8 ஆம் வரியை உடனடுத்து பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு வலுசக்தி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"(7) அட்டவணை I றின் (ஏ) (i) இல் குறிப்பீடு செய்யப்பட்ட கம்பெனியின் அலுவல்களை நிருவகித்தலும் முகாமை செய்தலும் பின்வரும் ஐந்து உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டிய அமைச்சரினால் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் சபையொன்றுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்:-

(அ) அமைச்சில் மேலதிகச் செயலாளர் ஒருவர் அல்லது அதற்குச் சமமானவொரு பதவிக்குக் குறையாதவொரு பதவியை வகிக்கின்றவரும் அமைச்சரின் அவ்வமைச்சிலிருந்தானவருமான பிரதிநிதி ஒருவர்;

(ஆ) பிரதித் திறைசேரிச் செயலாளர் ஒருவர்;

(இ) மின்சாரத்துறை இணைப்பு முகாமைத்துவத்தில் ஆகக்குறைந்தது பதினைந்தாண்டுகால அனுபவத்தைக் கொண்டுள்ள ஒரு ஆள்;

(ஈ) மின்பெறுகையில் பதினைந்தாண்டுகால அனுபவத்தைக் கொண்டுள்ள ஒரு ஆள்;

(உ) பின்வரும் துறைகளுள் ஏதேனுமொன்றில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றில் ஆகக்குறைந்தது பதினைந்தாண்டுகால அனுபவத்தையேனும் கொண்டுள்ள ஒரு ஆள்:-

(i) நிதிசார் முகாமைத்துவம்;

(ii) பொருளியல்;

(iii) கணக்கீடு; அல்லது

(iv) வர்த்தகச் சட்டம்,

அத்துடன், அவர்களுள் ஒருவர் அமைச்சரினால் தவிசாளராக நியமிக்கப்படுதல் வேண்டும்."

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

19 ஆம் பக்கத்தில் 12 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு வலுசக்தி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"பின்வரும் ஒன்பது உறுப்பினர்களைக்";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

19 ஆம் பக்கத்தில் 31 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு வலுசக்தி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"(iv) வர்த்தகச் சட்டம்;

(ஈ) நியமிக்கப்பட்ட தேதிக்கு முற்போந்த நாளன்று இலங்கை மின்சார சபையில் சேவையாற்றுகின்ற ஊழியர்களினதும் இலங்கை மின்சாரச் சபையின் முன்னாள் ஊழியர்களிலுமிருந்தும் நான்கு ஆட்கள்,";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

19 ஆம் பக்கத்தில் 35 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு வலுசக்தி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"ஆம் (6) ஆம், (7) ஆம் மற்றும் (8) ஆம் உட்பரிவுகளில்";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

20 ஆம் பக்கத்தில் 11 ஆம் வரியை உடனடுத்து பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு வலுசக்தி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"(இ) உட்பிரிவுகள் (4), (5), (6), (7) மற்றும் (8) என்பவற்றிலும் அட்டவணை I இன் (ஐ) (i) மற்றும் (ஐ) (ii) ஆகிய விடயங்களில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள கம்பெனிகளிலும் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள கம்பெனிகளின் பணிப்பாளர்கள் சபையானது, பணிப்பாளர்கள் சபையின் பணிப்பாளரொருவராக பதவியேற்பதற்கு முன்னர் நியமனத் தேதியன்றுள்ளவாறு அவர்களின் அக்கறைகள் பற்றிய பொதுவான வெளிக்காட்டுகையொன்றை அமைச்சருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஈ) பணிப்பாளர் சபையின் முன்னர் எடுக்கப்படவுள்ள ஏதேனும் கருமத்தில் நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ ஏதேனும் அக்கறைக் கொண்டுள்ள உட்பிரிவுகள் (4), (5), (6), (7) மற்றும் (8) என்பவற்றிலும் அட்டவணை I இன் (ஐ) (i) மற்றும் (ஐ) (ii) ஆகிய விடயங்களில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள கம்பெனிகளிலும் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள கம்பெனிகளின் எவரேனும் பணிப்பாளர் பணிப்பாளர் சபைக்கு அத்தகைய அக்கறையின் தன்மையினை வெளிக்காட்டுதல் வேண்டுமென்பதுடன் அக்கருமம் தொடர்பாக பணிப்பாளர் சபையின் ஏதேனும் கலந்தாராய்வில் அல்லது முடிபில் பங்குபற்றுதலுமாகாது.

(உ) அமைச்சரின் அமைச்சிலிருந்து அல்லது திறைசேரியிலிருந்தானவரான பிரதிநிதியொருவர் தவிர்ந்த எவரேனுமாள் அட்டவணை I இன் (அ), (உ), (ஊ), (எ), (ஏ) (i), (ஐ)(i) மற்றும் (ஐ)(ii) ஆகிய விடயங்களில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள கம்பெனிகளின் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பணிப்பாளர் சபைகளின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுதலாகாது."

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

20 ஆம் பக்கத்தில் 12 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு வலுசக்தி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"உட்பிரிவுகள் (4), (5), (6), (7) மற்றும் (8) ";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

14 ஆம் வாசகம்

21 ஆம் பக்கத்தில் 13 முதல் 27 வரையான (இரண்டுமுட்பட) வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு வலுசக்தி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் -

(அ) பந்தி (ஆ) வில் "இரண்டாண்டுகளுக்குப் பிந்தாமல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒரு ஆண்டினைப் பிந்தாமல்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்"

(ஆ) பந்தி (இ) இல் -

(1) "அட்டவணை I இன் (அ), (ஊ) மற்றும் (ஏ) (ii) என்னும் விடயங்களில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அட்டவணை I இன் (அ), (உ), (ஊ), (எ) மற்றும் (ஏ) (ii) என்னும் விடயங்களில்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்";

(2) "பந்தி (ஆ) இன் நியதிகளின் படி" இலிருந்து இறுதி வரையிலுமான எல்லா சொற்களுக்குப் பதிலாக, "பந்தி (ஆ) இன் நியதிகளின்படி."; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

22 ஆம் பக்கத்தில் 5 ஆம் வரியை உடனடுத்து பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு வலுசக்தி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"(ஆ) அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் "சகாய நிதியக் கடப்பாடுகளை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சகாய நிதியம் மற்றும் ஓய்வூதிய நிதியக் கட்டுப்பாடுகளை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்";";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

22 ஆம் பக்கத்தில் 12 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு வலுசக்தி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"இடுவதன்மூலமும்;";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

22 ஆம் பக்கத்தில் 12 ஆம் வரியை உடனடுத்து பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு வலுசக்தி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"(இ) இவ்வுட்பிரிவின் (எ) என்னும் பந்தியில், "17 ஆம் பிரிவு" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "17 ஆம் பிரிவு;"; என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ஈ) அவ்வுட்பிரிவின் (எ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(ஏ) வர்த்தமானியில் கடைசி கைமாற்றல் திட்டம் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து ஒரு வருடத்துக்கு முற்போந்த நாளன்று பிறப்பாக்கக் கம்பெனியில் பதவி வகிக்கின்ற (இப்பந்தியில் "பிறப்பாக்கக் கம்பெனி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அட்டவணை I றின் (அ) என்னும் விடயத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள பிறப்பாக்கக் கம்பெனியின் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும் -

(i) பிறப்பாக்கக் கம்பெனியினால் முறையாக அடையாளங் காணப்படுதல் வேண்டுமென;

(ii) வர்த்தமானியில் கடைசி கைமாற்றல் திட்டம் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து நான்கு மாதங்களினுள் அட்டவணை I றின் (ஐ) (i) என்னும் விடயத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முறையான அடுத்துறும் கம்பெனிகளுக்கு அவற்றின் உத்தேசிக்கப்பட்ட குறித்தளிப்புப் பற்றி பிறப்பாக்கக் கம்பெனியினால் அறிவிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(iii) அட்டவணை I றின் (ஐ) (i) என்னும் விடயத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முறையான அடுத்துறும் கம்பெனிகளுக்குக் குறித்தளிக்கப்படுவதற்கு அவர்கள் விருப்புத் தெரிவிக்கின்றனரா அல்லது இல்லையாவென உட்பந்தி (ii) இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள அறிவித்தல் பெறப்பட்டதிலிருந்து இரண்டு மாதங்களினுள் பிறப்பாக்கக் கம்பெனிக்கு அறிவிக்கும்படி தேவைப்படுத்தப்படுதல் வேண்டுமென,

உறுதிப்படுத்தல் வேண்டுமென்பதுடன் வர்த்தமானியில் கடைசி கைமாற்றல் திட்டம் வெளியிடப்படுகின்ற தேதியிலிருந்து ஒரு ஆண்டினை அடுத்துறும் தேதியிலிருந்து பயனுறுவதாக இலங்கை மின்சாரச் சபையுடனான அவர்களின் தொழில் ஒப்பந்தத்தின் கீழ் நியமிக்கப்பட்ட தேதிக்கு முற்போந்த நாளன்று அவர்களினால் துய்க்கப்பட்டவற்றைப் பார்க்கிலும் அனுகூலம் குறைந்தவையாகவிராத நியதிநிபந்தனைகளின்மீது கடைசி கைமாற்றல் திட்டத்தின் கீழான அட்டவணை I றின் (ஐ) (i) என்னும் விடயத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய அடுத்துறும் கம்பெனிகளுக்குக் குறித்தளிக்கப்படுதலும் வேண்டும். ஊழியரொருவர் கடைசி கைமாற்றல் திட்டத்தின் கீழான அட்டவணை I றின் (ஐ) (i) என்னும் விடயத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள அடுத்துறும் கம்பெனியொன்றுக்குக் குறித்தளிக்கப்படுவதற்கு விருப்புத் தெரிவிக்காதவிடத்து, அத்தகைய ஊழியர் தன்னிச்சையான இளைப்பாற்றுத் திட்டமொன்றுக்கு உரித்துடையவராதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய திட்டத்தின் நியதிநிபந்தனைகள் வர்த்தமானியில் கடைசி கைமாற்றல் திட்டம் வெளியிடப்படுகின்ற தேதியிலிருந்து நான்கு மாதங்களினுள் விதித்துரைக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஐ) வர்த்தமானியில் கடைசி கைமாற்றல் திட்டம் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து ஒரு வருடத்துக்கு முற்போந்த நாளன்று விநியோகிப்புக் கம்பெனியில் பதவி வகிக்கின்ற (இப் பந்தியில் "விநியோகிப்புக் கம்பெனி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அட்டவணை I றின் (எ) என்னும் விடயத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள விநியோகிப்புக் கம்பெனியின் எல்லா அலுவலர்களும் சேவாயாளர்களும் -

(i) விநியோகிப்புக் கம்பெனியினால் முறையாக அடையாளங் காணப்படுதல் வேண்டுமென;

(ii) வர்த்தமானயில் கடைசி கைமாற்றல் திட்டம் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து நான்கு மாதங்களினுள் அட்டவணை I றின் (ஐ) (i) என்னும் விடயத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முறையான அடுத்துறும் கம்பெனிகளுக்கு அவற்றின் உத்தேசிக்கப்பட்ட குறித்தளிப்புப் பற்றி விநியோகிப்புக் கம்பெனியினால் அறிவிக்கப்படுதல் வேண்டுமென; அத்துடன்

(iii) அட்டவணை I றின் (ஐ) (ii) என்னும் விடயத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முறையான அடுத்துறும் கம்பெனிகளுக்குக் குறித்தளிக்கப்படுவதற்கு அவர்கள் விருப்புத் தெரிவிக்கின்றனரா

அல்லது இல்லையாயென உட்பந்தி (ii) இல் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள அறிவித்தல் பெறப்பட்டதிலிருந்து இரண்டு மாதங்களினுள் விநியோகிப்புக் கம்பெனிக்கு அறிவிக்கும்படி தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்,

உறுதிப்படுத்தல் வேண்டுமென்பதுடன் வர்த்தமானியில் கடைசி கைமாற்றல் திட்டம் வெளியிடப்படுகின்ற தேதியிலிருந்து ஒரு வருடத்தை அடுத்துறுகின்ற தேதியிலிருந்து பயனுறுவதாக இலங்கை மின்சாரச் சபையுடனான அவர்களின் தொழில் ஒப்பபந்தித்தின் கீழ் நியமிக்கப்பட்ட தேதிக்கு முற்போந்த நாளன்று அவர்களினால் துய்க்கப்பட்டவற்றைப் பார்க்கிலும் அனுகூலம் குறைந்தவையாகவிராத நியதிநிபந்தகைளின் மீது கடைசி கைமாற்றல் திட்டத்தின் அட்டவணை அட்டவணை I றின் (ஐ) (ii) என்னும் விடயத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள அத்தகைய அடுத்துறும் கம்பெனிகளுக்குக் குறித்தளிக்கப்படுதல் வேண்டும். ஊழியரொருவர் கடைசி கைமாற்றல் திட்டத்தின் அட்டவணை I றின் (ஐ) (ii) என்னும் விடயத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள அடுத்துறும் கம்பெனியொன்றுக்குக் குறித்தளிக்கப்படுவதற்கு விருப்புத் தெரிவிக்காதவிடத்து, அத்தகைய ஊழியர் தன்னிச்சையான இளைப்பாற்றுத் திட்டமொன்றுக்கு உரித்துடையவராதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய திட்டத்தின் நியதிநிபந்தனைகள் வர்த்தமானியில் கடைசி கைமாற்றல் திட்டம் வெளியிடப்படுகின்ற தேதியிலிருந்து நான்கு மாதங்களினுள் விதித்துரைக்கப்படுதல் வேண்டும்.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

15 முதல் 18 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

19 ஆம் வாசகம்

27 ஆம் பக்கத்தில் 23 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு வலுசக்தி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"வர்த்தமானியிலும், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அதன் அடுத்துப்பின்னரான மீளாய்வுகள் மற்றும் நாளது வரையாக்கல்களும் வெளியிடப்பட்ட;";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

20 மற்றும் 21 ஆம் வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

புதிய வாசகங்கள்

24 ஆம் பக்கத்தில் 25 ஆம் வரியை உடனடுத்து பின்வரும் புதிய வாசகத்தை உட்புகுத்துமாறு வலுசக்தி அமைச்சர் புதிய திருத்தமொன்றைப் பிரேரித்தார்:-

| | |
|---|---|
| "முதன்மைச் சட்டவாக்கத் தின் 28 பிரிவைத் திருத்துதல் | **17.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவு, (1) ஆம் உட்பிரிவில் "மின்பிறப்பாக்கத்திலும் மின்விநியோகிப்பிலும் ஈடுபடுமிடத்தும், அவ்வாறு பிறப்பிக்கப்பட்ட மின்சாரத்தின் கொள்ளளவு அல்லது தொகையானது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மின்பிறப்பாகத்திலும், மின் விநியோகிப்பிலும் அல்லது மின்வழங்குகையிலும் ஈடுபடுமிடத்தும், அவ்வாறு பிறப்பிக்கப்பட்ட, விநியோகிக்கப்பட்ட அல்லது மின்வழங்கப்பட்ட மின்சாரத்தின் கொள்ளளவு அல்லது தொகையானது" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற் திருத்தப்படுகின்றது."; |

"வாசகம் இரண்டாம் முறையாக மதிப்பிடப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் சட்டமூலத்தில் சேர்க்கப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது

27 ஆம் பக்கத்தில் 14 ஆம் வரியை உடனடுத்து பின்வரும் புதிய வாசகத்தை உட்புகுத்துமாறு வலுசக்தி அமைச்சர் மேலுமொரு புதிய திருத்தமொன்றைப் பிரேரித்தார்:-

| | |
|---|---|
| "முதன்மைச் சட்டவாக்கத் தின் 40 பிரிவைத் திருத்துதல் | **19.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 40 ஆம் பிரிவு, "இச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அல்லது அவை தொடர்பாக ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.". என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இச் சட்டத்தின் ஏற்பாடுகள் எந்த ஆள் அல்லது எவ்வாட்களின் குழு தொடர்பாக ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.". என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற் திருத்தப்படுகின்றது. |

"வாசகம் இரண்டாம் முறையாக மதிப்பிடப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் சட்டமூலத்தில் சேர்க்கப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்

"சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களுடன் அறிவிக்கப்பட்டது.

""திருத்தப்பட்டவாறான சட்டமூலம் இப்பொழுது மூன்றாவது முறையாக மதிப்பிடப் பெறுமாக" "என வலுசக்தி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமைய சட்டமூலம் திருத்தப்பட்டவாறு மூன்றாம் முறையாக மதிப்பிடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

**7. புகையிலை வரிச் சட்டத்தின் கீழ் கட்டளை:** பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர் சார்பாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— திருத்தப்பட்டவாறான 1999 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, புகையிலை வரிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் பீடிக்கான வரியொன்றினை விதித்தல் தொடர்பாக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2025 ஏப்ரல் 01 ஆம் திகதிய 2430/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.07.11 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. தேயிலை (வரி மற்றும் ஏற்றுமதிக்கான கட்டுப்பாடு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்:** பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சார்பாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார் ,— 1959 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, தேயிலை (வரி மற்றும் ஏற்றுமதிக்கான கட்டுப்பாடு) சட்டத்தின் 7(1) மற்றும் 8(2) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 15 ஆம் பிரிவின் கீழ் இலங்கைத் தேயிலைச் சபையின் தவிசாளரினால் ஆக்கப்பட்டு, 2023 ஆகஸ்ட் 05 ஆம் திகதிய 2343/63 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.07.11 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**9. ஒத்திவைப்பு**: “இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக” என பாராளுமன்றச் சபை முதல்வர் பிரேரித்தார்.

அவ்வேளை நேரம் பி.ப. 5.30 மணிக்கு மேலாகிவிடவே, பி.ப. 6.01 மணிக்கு தலைமைதாங்கும் உறுப்பினர் இன்றைய தின சபைத் தீர்மானத்தின்படி பாராளுமன்றத்தை ஒத்திவைத்தார்.

அதன்படி பாராளுமன்றம் 2025 ஆகஸ்ட் 07 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 9.30 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.